நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2025) திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்ற 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டுக் கேடயங்கள், சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் 2892 பயனாளிகளுக்கு ரூபாய் 23.32 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், , மாநராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின்குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (பொ) க.பாண்டியன், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் தா.அரசு, அமராவதி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலை இணைப் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.மு.தனலட்சுமி, துணை பதிவாளர் திருமதி. முத்தமிழ்ச்செல்வி, கூட்டுறவு சார்பதிவாளர் அறிவழகன், கூட்டுறவு சங்கங்களின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், குந்தாரப்பள்ளி குமரன் மஹாலில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்து, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், தளி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநகர மேயர் சத்யா மற்றும் , கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நடராஜன் , துணை மேயர் ஆனந்தய்யா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கிருஷ்ணகிரியில் 72 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

1,088 பயனாளிகளுக்கு ரூ.10 கோடியே 36 இலட்சம் மதிப்பிலான கடன் உதவிகள்!

அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்! பிரகாஷ் எம்.எல்.ஏ. – தே. மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, நவ,21–

கிருஷ்ணகிரி மாவட்டம், குந்தாரப்பள்ளி குமரன் மஹாலில் 72–வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் , கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் , தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் மற்றும் ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நடராஜன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் மேலாண்மை இயக்குநர் மலர்விழி திட்ட விளக்கவுரையாற்றினார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி சிறப்புரை ஆற்றிய போது

கூட்டுறவு வார விழாவானது, அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் நவம்பர் 14 –ஆம் தேதி துவங்கி நவம்பர் 20 –ஆம் தேதி வரை ஒரு வாரத்திற்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தற்பொழுது 72–வது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ‘தன்னிறைவிற்கான கருவிகளாகக் கூட்டுறவுச் சங்கங்கள் எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 120 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 58 இதர கூட்டுறவு கடன் சங்கங்கள் என மொத்தம் 178 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் வேளாண் மேம்பாடு, மகளிர் மேம்பாடு, சிறுபான்மையினர் மேம்பாடு, பிற்படுத்தப்பட்டோர் மேம்பாடு மற்றும் சமூகத்தில் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்கு சிறந்த சேவையாற்றி வருகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 123 சங்கங்கள் மூலம் 60,214 நபர்களுக்கு ரூ.233.69 கோடி மதிப்பில் பயிர்கடனும், 120 சங்கங்கள் மூலம் 28,414 நபர்களுக்கு ரூ.230.79 கோடி மதிப்பில் பயிர்க்கடன் மற்றும் விவசாய நகைக்கடனும், 130 சங்கங்கள் மூலம் 21,373 நபர்களுக்கு ரூ.114.72 கோடி மதிப்பில் பொது நகைக்கடனும் (5 சவரன்), கூட்டுறவு வங்கிகள் ஃ சங்கங்கள் மூலம் 10,177 நபர்களுக்கு ரூ.42.66 கோடி மதிப்பில் மகளிர் சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 120 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 2024–2025 –ம் நிதி ஆண்டில் 40,287 விவசாயிகளுக்கு ரூ.431.17 கோடி மதிப்பிலும், நடப்பு நிதி ஆண்டிற்கு (2025–2026) நாளது தேதி வரை 18,999 விவசாயிகளுக்கு ரூ.202.65 கோடி மதிப்பில் வட்டியில்லா பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. அதேப்போல், 120 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கடந்த 2024–2025 ம் நிதி ஆண்டில் 11,766 விவசாயிகளுக்கு ரூ.50.11 கோடி மதிப்பிலும், நடப்பு நிதியாண்டில் (2025–2026) நாளதுதேதி வரை 4,367 விவசாயிகளுக்கு ரூ.18.75 கோடி மதிப்பில் வட்டியில்லா கால் நடை பராமரிப்புக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

அதேப்போல், 2024–2025 ம் நிதி ஆண்டில் 970 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.153.93 கோடி மதிப்பிலும், நடப்பு நிதியாண்டில் (2025–2026) நாளதுதேதி வரை 645 சுயஉதவி குழுக்களுக்கு ரூ.106.39 கோடி மதிப்பில் மகளிர் சுய உதவிக்குழுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 2024–2025 ம் நிதி ஆண்டில் 1,46,562 பொதுமக்களுக்கு ரூ.1421.29 கோடி மதிப்பிலும், நடப்பு நிதியாண்டில் (2025–2026) நாளதுதேதி வரை 78,123 பொதுமக்களுக்கு ரூ.817.49 கோடி அளவிற்கு நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 23 முதல்வர் மருந்தகங்கள் 24.02.2025 அன்று துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகங்கள் மூலம் (24.02.2025 முதல் 31.10.2025 வரை) ரூ.38.36 இலட்சம் மதிப்பில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு ரூ.8.45 இலட்சம் மதிப்பில் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை மூலம் 1,058 நியாயவிலைக் கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 36 நியாயவிலைக் கடைகள் என மொத்தம் 1,094 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5,77,170 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகிறார்கள். கடந்த ஜீன் 2021 முதல் புதியதாக 63,282 மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த ஜீன் 2021 முதல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதியதாக 16 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 120 புதிய பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் மற்றும் 74 பகுதி நேர நியாயவிலைக் கடைகளை முழுநேர நியாயவிலைக் கடைகளாகவும் மாற்றப்பட்டு நாளது தேதி வரை மொத்தம் 210 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு 71,225 குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டத்தின் மூலம் 29,804 குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 309 குழு அமைத்து 463 வாகனங்கள் மூலம் வீடு தேடி குடிமைப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் 70 வயதிற்கு மேற்பட்ட 23,145 குடும்ப அட்டைகளும், 65 – 70 வயதுடைய 5,493 குடும்ப அட்டைகளும் மற்றும் 1,166 மாற்றுதிறனாளிகள் குடும்ப அட்டைகளும் என மொத்தம் 29,804 குடும்ப அட்டைகள் பயன் பெற்று வருகிறார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் செயல்படும் 1,094 நியாயவிலைக் கடைகளில் உள்ள எடைதராசினை விற்பனை முனைய இயந்திரத்துடன் இணைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் சரியான அளவில் வழங்கப்பட்டு எவ்வித புகாருக்கும் இடமின்றி செயல்பட்டு வருகிறது. மேலும், புதியதாக கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் 550 நியாயவிலைக் கடைகளுக்கு கொள்கலன்கள் நிழற்கூடை மற்றும் பொலிவூட்டுதல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் அரசு கட்டடத்தில் செயல்படும் 150 நியாயவிலைக் கடைகளுக்கு பொலிவூட்ட ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பொலிவூட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் அரிசி 9736 மெ.டன், சர்க்கரை 745 மெ.டன், கோதுமை 287 மெ.டன், துவரம் பருப்பு 469 மெ.டன், பாமாயில் 470 மெ.டன் என மொத்தம் 11,706 மெ.டன் உணவுப் பொருள் கொள்முதல் செய்யப்பட்டு எவ்வித புகாருக்கும் இடமின்றி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் 6,39,737 நபர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளும், இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 16,880 நபர்களுக்கு சிகிச்சைகளும், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ், 4,14,809 காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 3,14,603 மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது. 1,50,000 விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 13,143 பயனாளிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், 1,447 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5 –ம் வகுப்பு வரை பயிலும் 69,711 மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. இல்லம் தேடி கல்வி திட்டத்தின் கீழ், 35,324 மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

மேலும், 44,687 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள், நஞ்சை புஞ்சை , மனை நிலங்களை ரயத்துமனையாக மாற்றம் செய்யப்பட்ட வகையில் 8,811 பயனாளிகளுக்கும், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 11,174 பயனாளிகளுக்கும், நகர நில வரித்திட்டத்தில் 13,073 பயனாளிகளுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இணையவழி பட்டா 6,425 பயனாளிகளுக்கும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இணைய வழி பட்டா 1,240 பயனாளிகளுக்கும், வன உரிமைச் சட்டத்தின் படி, 301 பயனாளிகள் என மொத்தம் 85,711 பயனாளிகளுக்கு இலவசமாக பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், 93,295 பயனாளிகளும், நலன் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், 28,502 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். விடியல் பயண திட்டத்தின் கீழ், 21.78 கோடி மகளிர்கள், 2.25 இலட்சம் திருநங்கைகள் மற்றும் 19.88 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் கட்டணமில்லாமல் பயணம் செய்துள்ளனர். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 –ம் வகுப்பு முதல் 12 –ம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர் கல்வி பயிலும் 34,164 மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழும், உயர்கல்வி பயிலும் 22,658 மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ், மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

நான் முதல்வன் திட்டத்தின் கீழ், 14,085 பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர்கள், 75,259 கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியர்கள், 17,369 பாலிடெக்னிக் தொழிற்பயிற்சிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 1,06,705 இளைஞர்கள் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர். கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், ரூ.118.83 கோடி மதிப்பீட்டில் 7,193 நபர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ், 49 நபர்களுக்கு ரூ.6.64 கோடி மதிப்பில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. பையூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத் திற்கான நிரந்தர கட்டிடம் ரூ.70.18 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ், 41,956 கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், 3,414 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி தெரிவித்தார்.

தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சிறப்பாக செயல்பட்ட 11 சங்கங்களுக்கு பாராட்டு கேடயங்களும், கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு நடைபெற்ற ஓவியம், கட்டுரை மற்றும் பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற 6 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும், 484 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 49 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பில் பயிர்கடனும், 239 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 14 இலட்சத்து 69 ஆயிரம் மதிப்பில் கால்நடை பராமரிப்பு கடனும், 26 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 340 நபர்களுக்கு ரூ.3 கோடியே 70 இலட்சத்து 63 ஆயிரம் மதிப்பில் மகளிர் சுய உதவிக்குழு கடன் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, தலா ரூ.6,350 வீதம் 25 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 58 ஆயிரத்து 925 மதிப்பில் மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம் என மொத்தம் 1,088 பயனாளிகளுக்கு ரூ.10 கோடியே 36 இலட்சத்து 55 ஆயிரத்து 925 மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

முன்னதாக, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கூட்டுறவு வாரவிழா உறுதிமொழியினை அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தய்யா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மோகன், நகராட்சி துணைத்தலைவர் திருமதி.சாவித்ரி, மற்றும் கூட்டுறவு சார் பதிவாளர்கள், சரக பதிவாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர், கூட்டுறவு சங்க செயலாளர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தென்காசி சங்கரன் கோவிலில்

அனைத்திந்திய கூட்டுறவு வார விழா - ரூ.48.62 கோடி கடன்!

பயனாளிகளுக்கு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்!

தென்காசி.நவ.21-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதிநகர் சீதாலட்சுமி மகாலில் நடைபெற்ற 72 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று 72-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில்-2025 கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்து,உறுதிமொழி ஏற்று,3095 பயனாளிகளுக்கு ரூ.48.62 கோடி மதிப்பீட்டில் வங்கி கடனுதவிகளை வழங்கினார்.

சங்கரன்கோவில் கோமதிநகர் சீதாலட்சுமி மகாலில் (18-11-2025) அன்று கூட்டுறவு துறை சார்பில் 72 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று கூட்டுறவு துறை சார்பில் நடைபெற்ற 72-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் -2025 கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்து, உறுதிமொழி ஏற்பும்,அதனைத் தொடர்ந்து 3,095 பயனாளிகளுக்கு ரூபாய்.48.62 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் உதவிகளை வழங்கி தெரிவித்தாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சி பெற்றிடும் வகையில்,பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வியத்தகு சாதனைகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, கூட்டுறவுவே நாட்டுயர்வு என்ற அடிப்படையில்,முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி பொதுமக்களை பயன்பெறச் செய்து வருகிறார்கள். அந்தவகையில் தமிழகம் முழுவதும் கூட்டுறவுத்துறையின் சார்பில் இன்றையதினம் 72-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா-2025 சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கூட்டுறவு சங்கம் என்பது நம்முடைய கூட்டுறவு சங்கம் தான்.அது நம்முடைய வங்கி,நாம் அனைவரும் சேர்ந்து உருவாக்கப்பட்டது தான். இந்த கூட்டுறவு வங்கி அதாவது கிராமத்தில் கூட்டுறவு வங்கி தொடங்குவதற்கு முன் விவசாயிகள் அந்த ஊரில் உள்ள பணக்காரர்களிடம் பயிரிடுவதற்கான வங்கிக் கடன் பெற்று அறுவடைக் காலங்களில் அந்தப் பணக்காரர்கள் களத்திற்கு வந்து வட்டியுடன் வசூல் செய்வார்கள்,அப்படி பணக்காரர் களிடம் அடிமையாக இருப்பதை தவிர்க்கும் விதமாக, கிராமத்தில் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்த வங்கியின் மூலம் பயிர்க் கடன்,நகைக் கடன்,மகளிர் சுய உதவி குழுக் கடன் போன்ற பல் வேறு வித கடன்கள் மூலம் நம்முடைய வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகிறது கூட்டுறவு வங்கி தான்.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு பல்வேறு வகையான கடன் திட்டங்களை செயல்படுத்தி உங்களுடைய சுமைகளை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

கூட்டுறவு வங்கியில் கடன் வாங்குபவர்கள் அதற்குரிய கடனை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி செலுத்துவதன் மூலம் மறுபடியும் அதிக கடன் உதவி பெற்று உங்களில் வாழ்வாதாரத்தை பெருக்கி சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய முடியும்.ஆகவே கூட்டுறவு வங்கியில் கடன் பெறும் பயனாளிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் தங்களுக்குரிய கடன் தொகையினை செலுத்தி உங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் கூட்டுறவுத் துறையின் சார்பில் 2 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும்,3,095 பயனாளிகளுக்கு ரூபாய்.48.62 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் உதவிகளும்,சிறந்த சங்கங்கள், சிறந்த நியாய விலைக் கடை விற்பனையாளர்கள்,பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் முதல் மதிப் பெண் பெற்ற கூட்டுறவு துறை பணியாளரின் குழந்தை களுக்கு பரிசுகள் மற்றும் கேடயங்களும், 72 -வது கூட்டுறவு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி, ஓவிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

முன்னதாக கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்து கூட்டுறவு துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அரங்கினை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பார்வையிட்டார்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு, மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி,

மாவட்ட அவைத் தலைவர் சுப்பையா, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் லாலா சங்கரபாண்டியன் (சங்கரன்கோவில்) பொன். முத்தையாபாண்டியன் (வாசுதேவநல்லூர்)திருநெல்வேலி தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி, ஒன்றிய செயலாளர் கள் கடற்கரை, ராமச்சந்திரன், கிறிஸ்டோபர்,பால்ராஜ், வெள்ளத்துரை, அன்பரசு,சேர்மதுரை, பெரியதுரை, சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ்,அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞரணி பிச்சையா, மாணவரணி உதயகுமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர், செயலாட்சியர் நா.திலிப்குமார், தென்காசி கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கு.நரசிம்மன், சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் கௌசல்யா, சங்கரன்கோவில் துணைப் பதிவாளர் கருமாரிதாசன்,கூட்டுறவு சார்பதிவாளர் மாரியப்பன், கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள்,கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

செஞ்சி பேரூராட்சியில் ரூ.17.70 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி!

செஞ்சி, நவ. 21-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் உள்ள வ.உ.சி தெருவில் பொது நிதி திட்டத்தின் கீழ் 17.70 லட்சம்ரூபாய் மதிப்பீட்டில் புதிய வடிகால்வாய் காலுடன், சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார். நகர செயலாளர் கார்த்திக் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு புதிய வடிகால்வாய் காலுடன் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு பணியை தொடங்கி வைத்தார்.

இதில் முன்னாள் கவுன்சிலர் லதா கார்த்தி,நிர்வாகிகள் முருகன், கோபி, கார்த்திக், பழனி, ஜோசப், ஜான், கிஷோர்,ரிஸ்வான், அருள், மகளிர் அணி ஸ்டெல்லா, பிரேமா தொண்டரணி பாஷா, பணி ஆய்வாளர் கௌதமன்உள்ளிட்ட நிர்வாகிகள்கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் அடுத்த லத்தேரி ஊராட்சி ரசுலப்பாக்கம், திருமணிஆகிய பகுதியில் புதிய ரேஷன் கடையை வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் திறந்து வைத்தார். உடன் ஊராட்சி குழுத்தலைவர் லோ. ரவிச்சந்திரன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் கே.சீதாராமன், ஜெயா முருகேசன், திவ்யா சிவக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் அண்ணாதுரை, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.